## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை – திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 21–ஆம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு 2057 தைத்திங்கள் 07–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.358/2020–ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண்.04/2025**

**மாரியப்பன்** ... **மனுதாரர்/வாதி.**

**–எதிர்–**

**அரிபுத்திரன்** ...**எதிர்மனுதாரர்/01–ஆம் பிரதிவாதி.**

இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.K.ராஜசேகரன்** அவர்களும் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.M.கோவிந்தராஜன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந் நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய நீதிமன்றத்தின் அனுமதி கோரி மனுதாரர்/வாதி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 8 -ஆம் வகுமுறையின் 09-ஆம் விதியின்கீழ் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார்.

### மனுவின் சுருக்கம்

01. எதிர்மனுதாரர்/01 ஆம் பிரதிவாதி கூடுதல் வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அதில் பல புதுச் சங்கதியையும் பல பொய் சங்கதிகளையும் கூறியுள்ளார். அதுச் சம்மந்தமாக மனுதாரர்/வாதி சில மறுப்பையும் சில விளக்கங்களையும் தெரிவிக்கக் கூடுதல்வாதுரை தாக்கல்செய்வது அவசியம்.

ஆகையால், கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய மனுதாரர்/வாதிக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

## எதிருரையின் சுருக்கம்

**02.** எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதி கூடுதல் வாதுரை தாக்கல்செய்த பிறகு ஒரு புதிய கதையை கூறுவதற்காக மனுதாரர்/வாதி கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய வேண்டும் என்று கோரி இம் மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/வாதி வழக்குச் சொத்தில் தனக்கும் பங்கு உள்ளது என்றும் அதுச் சம்மந்தமாக 02-ஆம் பிரதிவாதியுடன் குத்தகை ஒப்பந்தம் செய்துள்ளார் என்றும் கூடுதல் வாதுரையில் எதிர்மனுதாரர் சொல்லவில்லை. மனுதாரர்/வாதியும் எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதியும் ஒப்புக்கொண்டபடிதான் 16 அடி கிழக்கு-மேற்கு சாலை இருவராலும் பயன்படுத்தப்படுகிறது. மனுதாரர், 01-ஆம் எதிர்மனுதாரரின் தகப்பனார் உயிருடன் இருந்தபோதே வாய்மொழியாக பாகம் பிரிந்துவிட்டது. கூடுதல் வாதுரை தாக்கல் செய்து வழக்கின் தன்மையை மாற்ற மனுதாரர்/வாதி முயற்சிக்கிறார். ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

**03. இம் மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

**04.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. முதலேற்பு வழக்கில் வழக்கு விசாரணை தொடங்கப் பட்டு வாதி தரப்பு 01-ஆம் சான்றாளராக வாதி முதல்விசாரணையில்

சாட்சியம் அளித்தபின் வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்வதற்காக வழக்கு நிலுவையில் இருந்த - போது 01-ஆம் எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதி கூடுதல் வாதுரை தாக்கல் செய்ய வழக்கிடை விண்ணப்ப எண் 03/2025 ஐ தாக்கல்செய்தார். அந்த மனு அனுமதிக்கப்பட்டு அவருடைய கூடுதல் வாதுரை இந் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு மறுப்புரை தாக்கல்செய்ய நீதிமன்றத்தின் அனுமதி கோரி மனுதாரர்/வாதி இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார். மனுதாரர்/வாதியை கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித அநீதியும் விளையாது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.அவ்வாறு அனுமதிப்பதால் வழக்கின் இயல்போ, தன்மையோ மாறப்போவதில்லை. ஆகையால், இந்த மனுவை இந் நீதிமன்றம் அனுமதிக்கிறது.

**இறுதிமுடிவு**

05. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 21–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.01.21 17:37:37 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட /அமர்வு நீதிபதி,**
**சேலம்.**



IIIrd ADJ Court, Salem